[1973 பிப்ரவரி 13

திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை: சென்னையில் இருந்து நாகர்கோயிலுக்கு கிளம்புகிற மின்வேக துரித பஸ்கள், சென்னையைவிட்டுக் கிளம்பினால் விழுப்புரம் போய்த்தான் நிற்கின்றன. அங்கும் சரியான முறையில் உணவு உட்கொள்ள வசதி இல்லாத காரணத்தினால் நாகர்கோயில் போகிற பயணிகள் கிட்டத்தட்ட 16 மணி நேரம் பட்டினி கிடக்க வேண்டிய நிலைதான் இருக்கிறது. அப்படியன்றி நடுவில் நிற்கும் இடங்களில் பயணிகள் உணவு உட்கொள்ள நல்ல உணவு விடுதியையும் ஏற்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் உணவு விடுதி சரியாக இல்லை என்பது விழுப்புரத்திற்கே இழுக்கு. இது போன்ற மின்னல் வேக துரித பஸ்கள் உணவுவிடுதி வசதியுள்ள இடங்களில் தான் நிறுத்தப்படுகின்றன. ஆனால், யார் யாருக்கு என்ன ருசியான உணவு தேவை என்பது அவர்களுடைய தனி பிரச்சினை. இதுபோல் மின்னல்வேக துரித பஸ்கள் நிற்கும் இடங்களில் எல்லா வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டி உணவு விடுதியை ஏலத்திற்கு விடலாமா என்பதும் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: விழுப்புரத்தில் இருக்கிற ஓட்டல் யாருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய நிலைமையில் இல்லை. ஆகவே அங்கே நல்லதொரு ஓட்டல் ஏற்பட தக்க வசதி செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது ஒருவருடைய சுவையைப் பொறுத்த கேள்வி. பஸ்ஸைப் பொறுத்த கேள்வி அல்ல.

திரு. நா. வெ. குருசாமி: மதுரையில் இருந்து குமிழிக்கும், திண்டுக்கல்லில் இருந்து குமிழிக்கும் நடுவில் தேனீ போன்ற வியாபார ஸ்தலங்கள் இருக்கிற காரணத்தினால் இரவு நேரங்களில் பஸ்விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தேவைப்படுமானால் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அதனைப் பரிசீலனை செய்யும்.

திரு. நா. வீராசாமி: இரவு நேர பஸ்களில்—இரயில் ஸ்லீப்பர்கோச் போட்டிருப்பதுபோல—ஒரு ஸ்லீப்பர்கோச்சையும் இணைத்தால்—இரண்டு பங்கு கட்டணம் கூட வாங்கலாம்—வருவாயும் பெருகும், பயணிகளுக்கு வசதியாக இருக்குமே, இதுபற்றி பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நீண்டதூரப் பயணத்திற்கு வசதியாக இரயிலும், அருகில் உள்ள நகரங்களுக்கு, கிராமங்களுக்கு எல்லாம் போக வசதியாக பஸ் போக்குவரத்தும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த பஸ்களில் படுக்கையைப் போட்டு—நான்கு இருக்கைகளை எடுத்துக்கொள்வது மக்களுக்கு நன்மை தரக்கூடியதாக இருக்காது.